# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08


நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | மாசி - 22 | 06-03-2003 | வியாழக்கிழமை | ஓசை 16



கிறின்லே அக்கடமி
கனகபுரம் கிளிநொச்சி
கலை - கணிதம் - உயிரியல்
A/L 2005
ஆரம்பம் 08-03-2003
(சனி 9.00 மணி)
(புதுக்குடியிருப்பில்
ஆரம்பமாகிவிட்டது)
(2750)




தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் மேஜர் ஜெனரல் ட்ரோன் புருவ் ஹொவ்டேயை கைலாகு கொடுத்து வரவேற்கின்,  ர்.



தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் மேஜர் ஜெனரல் ரெலவ்சனுக்கு நினைவுப் பரிசில் வழங்குகிறார்.

### தேசியத் தலைவர் - கண்காணிப்புக் குழுத் தலைவர்கள் சந்திப்பு

# உண்மையான சமாதானமும், நிம்மதியான வாழ்வும் தமிழ் மக்களுக்கு இன்னமும் கிட்டவில்லை!

## தலைவர் பிரபாகரன் வலியுறுத்து

**(கிளிநொச்சி)**

**ஒரு வருட காலமாக போர் மாத்திரம் நின்றிருக்கின்றதே தவிர உண்மையான சமாதானமும், இயல்பு நிலையும் மக்களுக்கு நிம்மதியான வாழ்க்கையும் தோற்றுவிக்கப்படவில்லை என்ற யதார்த்தத்தினை நேற்றுத் தம்மைச் சந்தித்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர்களிடம் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் வலியுறுத்திக் கூறினார்.**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சனையும், ஓய்வு பெற்றுச் செல்லும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரொன்புறூவ் ஷொவ்டெவையும் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

மேற்படி சந்திப்பு நேற்று பகல் 11.00 மணி முதல் பி.ப. 1.00 மணி வரை கிளிநொச்சி அரசியல்துறை நடுவப் பணியகத்தில் இடம்பெற்றது.

இரு மணிநேரம் இடம்பெற்ற

(08ஆம் பக்கம் பார்க்க)

## ரெலவ்சனுக்கு தலைவரின் நினைவுப் பரிசு!

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களால் நோர்வேயின் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சன் புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

நேற்றைய சந்திப்பின் முடிவில் இந்நினைவுப் பரிசு தமிழீழ தேசியத் தலைவர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் புதிய மற்றும் பழைய தலைவர்களுக்கு மதியபோசன விருந்தும் வழங்கப்பட்டது.

## தலைவரினால் நல்லெண்ண அடிப்படையில் தடுப்புக்காவல் கைதிகள் விடுவிப்பு

(அலுவலகச் செய்தியாளர்)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அத்து மீறிப் பிரவேசித்ததன் விளைவாக கைது செய்யப்பட்டு தமிழீழ நீதி மன்றின் உத்தரவின் அடிப்படையில் தடுப்புக்காவலில் வைக்கப் பட்டிருந்த சிறிலங்கா இராணுவச் சிப்பாய் ஒருவரும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் நல்லெண்ண மனிதாபிமான அடிப்படையில் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களினால் விடுவிக்கப்பட்டு, அவ்விருவரும் சர்வதேசப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பதில் தலைவர் மற்றும் ஓய்வு பெற்றுச் செல்லும் கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் கையளிக்கப்பட்டனர்.

இது குறித்து, தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் கண்காணிப்புக்குழுத் தலைவர்

(08ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தலைவருடனான சந்திப்பு முக்கியமானது

### புதிய கண்காணிப்புக் குழுத் தலைவர்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்துடனான சந்திப்பு ஒரு முக்கியமான சந்திப்பாக இருந்ததாக நோர்வே போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சன் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சியில் தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களைச் சந்தித்து உரையாடிய பின் எமது செய்தியாளரிடம் கண்காணிப்புக் குழுத்தலைவர் இவ்வாறு தெரி

(08ஆம் பக்கம் பார்க்க)

### - களுத்துறைச் சிறைக் கைதிகள் குறித்து -

## கண்காணிப்புக்குழுத் தலைவர்களிடம் தலைவர் பிரபாகரன் பிரஸ்தாபம்

தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் நேற்றுத் தம்மைச் சந்தித்த போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் குறித்து பிரஸ்தாபித்ததுடன் அவர்களுக்காக தமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா அரசாங்கம் எமது மக்கள் மத்தியில் நீதியை நிலைநாட்டத் தவறிவிட்டது என்றும் தமிழீழத் தேசியத்தலைவர் அவர்கள் கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவித்துள்ளார்.

## களுத்துறைச் சிறையில் கைதிகளின் உண்ணாவிரதம் தொடர்கிறது

களுத்துறைச் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்து இடம் பெற்றுள்ளது.

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 61 கைதிகளில் ஏழு பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகச் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து அனுராதபுரம், நீர்கொழும்பு சிறைச்சாலைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளும் தொடர்ந்தும் உண்ணாவிரதப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

வரிவிளம்பரம்

## வெளிவந்துவிட்டது

"பொது அறிவு-தேடலும் தெளிவும்" - 2003" 2002/2003 கால மிக முக்கியவிடயங்களுடன் சமகால தகவல்களும் உடன் A/L -2003 பரீட்சைக்கும் சகல போட்டிப் பரீட்சைகளுக்கும். வவுனியாவில் - எல்லா புத்தகசாலைகளிலும் வன்னியில் - அறிவமுது பொத்தக சாலைகளிலும் (பிரதிகள் மிகக் குறைவு முந்துங்கள்)

விலை - 42/= (2996)


- தொண்டர், பகுதிநேர ஆங். ஆசிரியர்களை -

# ஆவணங்களுடன் இன்று சமுகம் தரக் கோரிக்கை

(அலுவலகச் செய்தியாளர்)

தொண்டர் ஆசிரியர்களினதும், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களினதும் பூரணமான விபரங்களைக் கல்வி அமைச்சிற்கும், திறைசேரிக்கும் கொண்டு செல்ல வேண்டியிருப்பதால் கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களையும், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும், வடமாகாண தொண்டர் ஆசிரியர் ஒன்றியப் பிரதிநிதிகளையும் தமது சேவை பற்றிய பூரண ஆவணங்களுடன் இன்று காலை 9.00 மணிக்கு முன்பதாக கிளிநொச்சி அரச செயலகத்தில் ஒன்று கூடுமாறு வடமாகாண தொண்டர் ஆசிரியர் ஒன்றியச் செயலர் அவசர வேண்டுகை விடுத்துள்ளார் (சோ)


## துயர் பகிர்வோம்

எமது பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் திரு. இ.ஜெகதாசன் அவர்களின் அன்புத் தாயார் அமரர் இராசையா மகேஸ்வரி அவர்கள் 01.03.2003 இல் யாழ்.இல் இறைபதம் எய்தியுள்ளார். அவர்களிற்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர்
நலன்புரிச்சங்கம்,
மு / விசுவமடு மகா வித்தியாலயம்.

(2749)


# பல்கலைக்கழக மாணவர், பெற்றோர் பாராளுமன்றம் முன்பாக ஆர்ப்பாட்டம்!

## கண்ணீர் புகைக்குண்டு வீசிக் கலைப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து நேற்றுக் காலை சிறிலங்கா பாராளுமன்றத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தை பொலிசார் கண்ணீர் புகைக் குண்டுத் தாக்குதலை நடத்தி கலைத்துள்ளனர்.

சப்பிரகமுவ பல்கலைக்கழக மாணவர்களும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் பாராளுமன்றம் நோக்கிச் செல்ல முற்பட்டபோதே பொலிசார் இவர்கள் மீது கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டனர்.


## நீங்காத நினைவுகள் 31ஆம் நாள் அஞ்சலி

### அமரர் ஐயம்பிள்ளை கந்தையா (வன்னிக் கந்தையா)

கடந்த 03.02.2003இல் திருவையாறு, கிளிநொச்சியில் இறைவனடியெய்தியவரும், கிளிநொச்சி அம்பாள் குளம் கிராம அலுவலர் திரு. க.தர்மலிங்கம் அவர்களின் பாசமிகு தந்தையாருமான அமரர் ஐயம்பிள்ளை கந்தையா (வன்னிக் கந்தையா) அவர்களின் 03.03.2003இல் நடைபெற்ற நினைவில் நாமும் பங்கேற்று அன்னாரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திப்பதில் நிறைவெய்துகிறோம்.

செயலாளர்,
கிராம அலுவலர் தொழிற்சங்கம்,
கிளிநொச்சி மாவட்டம்.

(2998)


## முல்லை. வைத்தியசாலை புனரமைப்புப் பணி

(முல்லைத்தீவு)

முல்லை. மாவட்ட வைத்தியசாலையினை புனரமைக்கும் நோக்கில் (கட்டம் I) 'நிக்கொட்' நிறுவனப் பிரதிநிதி, உலக சுகாதார ஸ்தாபனப் பிரதிநிதி,முல்லை மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் ஆகியோர் வைத்தியசாலை வளாகத்தைப் பார்வை யிட்டனர்.

'நிக்கொட்' திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் வைத்திய சாலைகளில் இதுவும் ஒன்றாகும். நிர்மாணப் பணிக்கான வரைபடம் தயாரிக்கும் நோக்கிலேயே வளாகப்பகுதி பார்வையிடப்பட்டதாகத் தெரியவருகிறது. (20)


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 12-06-1924

விண்ணில் 08-03-2000



அமரர்

### உயர் திரு. கந்தையா சின்னத்துரை

(முன்னாள் கிளி/பட்டினசபை லிகிதர்)

திதி : 06.03.2003

ஆண்டுகள் மூன்று கடந்தாலும்
ஆறிடுமோ உங்கள் நினைவு.
வையத்தில் நீங்கள் வாழ்ந்தது போல்
இன்றும் எம் நெஞ்சில் வாழ்கின்றீர்.

401, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி.

குடும்பத்தினர்.

(2995)



## நன்றி நவிலல்

### திருமதி செல்வகுமார், கல்பனா, (வவி)

03.03.2003 அன்று கிளிநொச்சி வீதி விபத்தில் அகால மரணமாகிய திருமதி செல்வகுமார் கல்பனா (வவி) அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு சகல உதவிகளையும் புரிந்த 3ஆம் வாய்க்கால் பன்னங்கண்டி மக்களுக்கும், பிற இடங்களில் இருந்து கலந்துகொண்ட மக்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள், தமிழீழ காவல்துறை, மற்றும் நிதித்துறைப் பணியாளர்களுக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்: வே. கருணாகரன் (தந்தை) குடும்பத்தினர்
3ஆம் வாய்க்கால், D3 பன்னங்கண்டி.
கிளிநொச்சி.

(3000)



## பணிநிலை வேண்டுகை

திரைப்பட வெளியீட்டுப் பிரிவில் கீழ்க்காணும் பணிநிலைகளுக்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**பணிநிலைகள்** :- 01. கணக்குப் பதிவாளர்கள்.
02. தொடர்பாளர்கள்.
03. திரையரங்கு பரிசோதகர்கள்.
04. உதவியாளர்கள்.

**வயது** :- 18 இருந்து 30 வயது வரை

**தகைமை** :- ஆண்டு 09,10,11 வரை படித்த ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்கள் சேர்க்க வேண்டிய முகவரிகள்:-

01. திரைப்பட வெளியீட்டுப் பிரிவு தொடர்பகம் - கிளிநொச்சி
02. " " " - கந்தபுரம்
03. " " " - முழங்காவில்
04. " " " - பள்ளமடு
05. " " " - துணுக்காய்
06. " " " - கனகராயன்குளம்
07. " " " - விசுவமடு
08. " " " - புதுக்குடியிருப்பு
09. " " " - முள்ளியவளை
10. " " " - பளை.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 20.03.2003இற்கு முன் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

திரைப்பட வெளியீட்டுப் பிரிவு,
அரசியல்துறை,
தமிழீழம்.

(சி-7804)



## ஏல விற்பனை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் பாவனைக்கு உட்படுத்தப்பட்ட கீழ்வரும் பொருட்கள் ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

01. டீசல் இயந்திரம் (லேடன், இசுசு, போர்ட், லிஸ்ட்டர், ரஸ்டர்)
02. மின் பிறப்பாக்கிகள் (50 K.V, 40 K.V, 35 K.V, 15 K.V) மின் உபகரணங்கள்.
03. வாகன உதிரிப்பாகங்கள்.
04. வாகனம் ஆட்டோ.
05. கோழித்தீன், இனிப்புவகை உற்பத்தி செய்யும் உபகரணங்கள், உணவக உபகரணங்கள், அச்சகப் பொருட்கள், காகிதாதிகள், அலுவலகத் தளபாடங்கள், இரும்புக் கதிரைகள்.

இவற்றினை பார்வையிட விரும்புவோர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், நடுவப்பணியகம். வட்டக்கச்சி / பல்லவன் அரைக்கும்ஆலை, கணேசபுரம் ஆகிய இடங்களில் 07.04.2003 - 09.04.2003 வரை பார்வையிடலாம்.

** ஏலவிற்பனை 10.03.2003 திங்கள், 11.03.2003 செவ்வாய் ஆகிய தினங்களில் காலை 10.00 மணிக்கு மேற்குறிப்பிட்ட இடங்களில் இடம்பெறும். (சி-7700)



## காணி குத்தகைக்குத் தேவை

கிளிநொச்சி நகரின் மையத்திலிருந்து மூன்று (03) கிலோமீற்றர் சுற்றளவினுள் அண்ணளவாக ஒரு ஏக்கர் அளவுள்ள வெற்றுக்காணி, தமிழீழ வைப்பகத்தின் பயன்பாட்டிற்குத் தேவையாகவுள்ளது. கிணறு இருத்தல் விரும்பத்தக்கது. காணியைக் குத்தகைக்கு வழங்க விரும்புவோர் திருநகர், கிளிநொச்சி என்னும் முகவரியில் இயங்கும் தமிழீழ வைப்பக நடுவப்பணியகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். ஏனைய விளக்கங்கள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆளுகை மேலாளர்,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி-7698)

# எமது நிலைப்பாட்டிற்கான ஆதரவு பாதுகாப்பு சபையில் பெருகி வருகிறது

## அமெரிக்கா வெளியிடும் புதிய தகவல்

**ஈராக் விவகாரத்தில் தமது நிலைப்பாட்டிற்கான ஆதரவு ஐ.நா. பாதுகாப்பு சபையில் பெருகிவருகிறது என அமெரிக்கா நம்பிக்கை வெளியிட்டுள்ளது. அமெரிக்க வெளியுறவு அமைச்சின் செயலாளர் கொலின் பவல் இத் தகவலை வெளியிட்டுள்ளார்.**

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் ஈராக் தொடர்பாக இரண்டாவது தீர்மானத்தை அமெரிக்காவும் பிரிட்டனும் இணைந்து சமர்ப்பித்துள்ள நிலையில் இவ் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தீர்மானம் வாக்களிப்பிற்கு விடப்பட்டால் பெரும்பாலான அங்கத்துவ நாடுகள் ஆதரவாக வாக்களிக்கும் என அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கொலின் பவல் கூறியுள்ளார்.

அமெரிக்காவும், பிரிட்டனும் கூட்டாக சமர்ப்பித்துள்ள தீர்மானத்தை எப்போது வாக்களிப்பிற்கு விடுவது என இன்னும் தீர்மானிக்கப்படவில்லை எனினும் அடுத்த வாரமளவில் இத்தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் பதினைந்து நாடுகளில் எத்தனை நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்கும் என்பது பற்றி அவர் எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை.

பெரும்பாலான நாடுகள் யுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் நிலையில், அமெரிக்கா இந்நாடுகளில் தனது தீர்மானத்திற்கு ஆதரவு கோரும் நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கியுள்ளது.

ரஷ்யா, பிரான்ஸ், சீனா என்பன ஏற்கனவே பகிரங்கமாக இதனை எதிர்த்துக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன. இந்நாடுகள் வீட்டோ அதிகாரத்தைக் கொண்டுள்ளவை ஆகும்.

இந்நிலையில், தீர்மானம் வெற்றிபெற வேண்டுமானால் ஒன்பது நாடுகள் ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.



பிரிட்டனின் றோயல் விமானப் படைக்குச் சொந்தமான GR-7 என்ற தாக்குதல் விமானம் வளைகுடா தளம் ஒன்றிலிருந்து கிளம்பிச்செல்கிறது.

# ஈராக் விவகாரத்தில் பாகிஸ்தான் திரிசங்கு நிலை!

ஈராக் விவகாரம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு பேரவையில் எடுக்கப்படும் தீர்மானத்துக்கு ஆதரவு வழங்குவதா? இல்லையா? என்பது குறித்து பாகிஸ்தான் இன்னமும் தீர்மானிக்கவில்லை என்று பாகிஸ்தானின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் வெளிவிவகார அமைச்சருடன் நடத்திய அரைமணி நேர தொலைபேசி உரையாடலின் போதே அவர் இதனை தெரிவித்ததாக பாகிஸ்தானின் உத்தியோகபூர்வ பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விடயத்தில் பாகிஸ்தான் என்ன வகையான முடிவை எடுத்தாலும் அது ஐக்கிய நாடுகளின் விதிகளுக்கு உட்பட்டதாகவே இருக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.


# பிலிப்பைன்ஸ் விமான நிலையத்தில் சக்தி வாய்ந்த குண்டு வெடிப்பு

## 19 பேர் உயிரிழப்பு, 100 க்கு மேல் காயம்

(மணிலா)

பிலிப்பைன்ஸில் விமான நிலையமொன்றில் நேற்று முன்தினம் இடம் பெற்ற சக்தி வாய்ந்த குண்டு வெடிப்பில் 19 பேர் உயிரிழந்துள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இதில் இருபது பேர் ஆபத்தான நிலையில் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

தென்பகுதி தீவிலுள்ள டவாவோ விமான நிலையத்தில் இந்தச் சம்பவம் இடம் பெற்றதாக அறிவிக்கப்படுகிறது. கொல்லப்பட்டவர்களில் நால்வர் அமெரிக்கர்களாவர்.



குண்டு வெடிப்பு நடைபெற்ற பகுதி பிலிப்பைன்ஸின் இரண்டாவது பெரிய நகரிலுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும், மோரோ இஸ்லாமிய விடுதலை முன்னணியே தாக்குதலை நடத்தியிருப்பதாக படைத்தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 20 ஆம் திகதி மின்டானோ தீவிலுள்ள கோராபற்றோ நகரிலுள்ள உள்ளூர் விமான நிலையமொன்றில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் படைவீரர் ஒருவரும், ஆறு பொது மக்களும் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நெடுமாறன் தடுத்து வைப்பிற்கு தி.மு.க. கடும் கண்டனம்

(சென்னை)

தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ. நெடுமாறன், தமிழக அரசால் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணித் தலைவர் மு.க. ஸ்ராலின் கண்டனம் வெளியிட்டுள்ளார்

'பொடோ' சட்டத்தின் கீழ் கடலூர் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள பழ.நெடுமாறனைச் சந்தித்து நலம் விசாரித்த அவர் நேற்று முன்தினம் செய்தியாளரைச் சந்தித்த போது தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

தமிழக அரசு பொடோ சட்டத்தை தவறாகப் பயன்படுத்தி மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலர் வை. கோ.வைக் கைது செய்ததைப் போன்று பழ. நெடுமாறனையும் கைது செய்துள்ளது. பழ.நெடுமாறன் சிறையில் சித்திரவதைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார் என்றும் ஸ்ராலின் தமிழக அரசு மீது குற்றம் சாட்டியுள்ளார்.

# தலைமறைவு வாழ்விற்கு சூடான் அரசும் ஆலோசனை

யுத்தத்தை தவிர்ப்பதற்காக ஈராக்கிய சனாதிபதி சதாம் ஹுசைன் தலைமறைவு வாழ்க்கை மேற்கொள்ள வேண்டும் என்ற யோசனையை வரவேற்பதாக சூடான் கூறியுள்ளது.

இவரின் தலைமறைவு வாழ்க்கை பற்றிய யோசனையை முதலில் வெளியிட்ட ஐக்கிய அரபு குடியரசின் சனாதிபதியுடன் தொலைபேசியில் சூடானிய சனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார். எனினும் ஐக்கிய அரபு குடியரசு முன்வைத்த இந்த யோசனையை அரபுலீக் தலைவர்கள் புறக்கணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



மேற்குக் கரையின் நேப்பிள்ஸ் நகரில் இஸ்ரேலிய டாங்கி ஒன்றின் மீது கல்லெறியும் பலஸ்தீன பள்ளிமாணவி

# தன்சானியாவில் யுத்த நிறுத்த உடன்பாட்டை துரிதமாக நடைமுறைப்படுத்த முடிவு

தன்சானியாவில் டிசெம்பர் மாதத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையை துரிதமாக நடைமுறைப்படுத்துவது என புறுன்டி அரசும் பிரான கிளர்ச்சிவாதக் குழுவும் இணங்கியுள்ளன

இவர்களுக்கிடையில் இடம்பெற்ற யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவென இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. 1993ஆம் ஆண்டிலிருந்து இடம்பெற்று வந்த மோதல்களினால் 3 லட்சத்திற்கும் அதிகமானோர் இறந்துள்ளனர்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்குக் கொண்டு வருவது பற்றி ஆராயவென புறுன்டி சனாதிபதி, கிளர்ச்சிவாதக் குழுவின் தலைவர்களும் கடந்த சனிக்கிழமை சந்தித்து உரையாடியுள்ளனர்.

ஆபிரிக்க நாடுகளின் அமைதிப் படையினர் விரைவில் சேவைக்கு அழைக்கப்பட வேண்டும் எனவும் யுத்த நிறுத்தம் சம்பந்தமாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றம் பாராட்டத்தக்கது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தன்சானிய சனாதிபதி பெஞ்ஞமின் தலைமையில் நடை பெற்ற இந்த பேச்சுவார்த்தைகளின் போது தென்னாபிரிக்க பிரதி சனாதிபதியும் சமுகம் அளித்துள்ளார்.

# சென்னை அமர்வு நீதிமன்றால் சு.ப.வீரபாண்டியன் விடுதலை

(சென்னை)

விடுதலைப் புலிகளை ஆதரித்து பேசிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட சு.ப.வீரபாண்டியன் நேற்று முன்தினம் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டார்.

இவர் மீதான குற்றச்சாட்டிற்கிணங்க சைதாபேட்டை நீதிமன்றத்தில் இவருக்கு இரண்டு ஆண்டுகள் கடும் காவல் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இத்தீர்ப்புக்கு எதிராக சென்னை அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந் நீதிமன்றம். தண்டனையிலிருந்து சு.ப. வீரபாண்டியனை விடுவித்து தீர்ப்பளித்துள்ளது.

# நைஜீரியாவில் குழு மோதல்; 64 பேர் பலியாகினர்!

(அபுஜா)

நைஜீரியாவின் வட-கிழக்கு பகுதியில் இனக்குழுக்களுக்கிடையிலான சண்டை காரணமாக 64 பேர் பலியாகியுள்ளனர்.

இரண்டு குழுக்களைச் சேர்ந்த பழங்குடியினரும், விவசாயிகளும் பலதடவைகள் சண்டையில் ஈடுபட்டுள்ளனர்.

பலியானவர்களில் படைச் சிப்பாய் ஒருவரும் பொலிசார் ஒருவரும் அடங்குகின்றனர்.

ஏப்ரல் 12ஆம் திகதி தொடக்கம் மே மூன்றாம் திகதிவரை தொடராக சனாதிபதி தேர்தலையும் உள்ளூராட்சித் தேர்தலையும் அந்நாடு நடத்தவுள்ள வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அதே வேளை கிளர்ச்சியாளர்களும் அரசிற்கு காலக்கெடு விதித்துள்ளமை தெரிந்ததே.

# காஷ்மீரில் விரைவில் சமூக நிலை; புதிய நம்பிக்கைகள் வீண்போகுமா?

காஷ்மீர் பிரச்சினை காரணமாக முரண்பட்டு நிற்கும் இந்திய, பாகிஸ்தான் தலைவர்கள் மலேசியாவில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் மாநாட்டில் மீண்டும் சந்தித்துக் கொண்டபோதும் ஒருவரை ஒருவர் நேருக்கு நேர் சந்திப்பதைகூட தவிர்த்துக் கொண்டுள்ளனர்.

இந்தியப் பாராளுமன்றம் ஆயுததாரிகளின்



தாக்குதல்களுக்கு உள்ளாகியதையடுத்து இரு நாட்டு உயர் தலைவர்களும் சந்தித்துக் கொள்வது இது நான்காவது தடவையாகும்.

இதற்கு முன்பு சர்வதேச மட்டக் கூட்டங்களில் இவர்கள் சந்தித்துக் கொண்டாலும் ஒருவரோடு ஒருவர் கதைத்துக் கொண்டதில்லை. இருப்பினும் உரையாடல்களின்போது மட்டும் கருத்துக்கள் முன் வைப்பதுதான் வழமை.

இம்முறை மாறாக அணிசேரா மாநாட்டில், "காஷ்மீர் மக்களை இந்திய அரசு ஒடுக்கி வருவதால், இப்பிரச்சினைக்கு அணிசேரா நாடுகள் தீர்வு காண வேண்டும்" என பாகிஸ்தான் சனாதிபதி 'பர்வேஷ் முஷாரப்' கோரிக்கை விடுத்திருந்தார்.

கடந்த பெப்ரவரி 20 முதல் 25 வரை நடைபெற்ற அணிசேரா நாடுகளின் மாநாட்டில் பாகிஸ்தான் சனாதிபதி விடுத்த கோரிக்கைக்கு மாநாட்டில் உரையாற்றிய இந்தியப் பிரதமர் 'வாஜ்பாய்', இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியைப் பிரிக்க பாகிஸ்தான் கையாளும் தந்திரோபாயமே காஷ்மீர் பிரச்சினையை சர்வதேச பிரச்சினையாகக் காட்டுவது என்றும், பயங்கர வாதத்தைச் சுதந்திரப் போராட்டத்துடன் ஒப்பிடுவதும், பயங்கரவாதத்தின் காரணத்தைக் கண்டறிய வேண்டும் எனக் கூறுவதும் இரட்டை வேடம் என்றும் சாடியுள்ளார். அத்துடன் மனிதாபிமானம்

**அ. கலைவாணி**

பற்றிப்பேசும் பாகிஸ்தான் சனாதிபதி பயங்கரவாதத்தை அழிக்க ஏதும் நடவடிக்கை எடுத்துள்ளாரா...? என்றும் வினா எழுப்பியுள்ளார்.

இதனிடையே, இரு நாடுகளும் எல்லைகளில் படைகளை குவிப்பதனால் போர் மேகம் சூழ்ந்துள்ள வேளையிலும், அணு ஆலைகள் பற்றிய பட்டியலை பரஸ்பரம் இந்த ஆண்டிலும் பரிமாறிக் கொண்டுள்ளன.

இரு நாடுகளிடமும் அணுவாயுதங்கள் உள்ளன. இரு நாடுகளுக்குமிடையே போர் ஏற்படுமானால் அணுமின் நிலையங்களும், உலைகளும் தாக்கப்படாமல் தவிர்க்க, கடந்த 1991ஆம் ஆண்டு இந்திய - பாகிஸ்தான் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

இதன்படி இரு நாடுகளும் பரஸ்பரம் தமது அணுமின் நிலையங்கள் மற்றும் அணு உலைகள் பற்றிய விபரங்களைத் தெரிவிக்க வேண்டும் என்பதற்கிணங்க, இரு நாடுகளும் அணு மின் தகவல்களைப் பரிமாறிக் கொண்டன..

அதன் பின்பு 1998 இல் இன்னுமொரு ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதன்படி, புதிதான அணுமின் நிலையங்கள், அணு உலைகள் பற்றிய விபரங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன..

இவ்விபரங்களே தற்போதும் 11ஆவது ஆண்டாக இந்த ஆண்டும் பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளது..

பாகிஸ்தான் சனாதிபதி 'பர்வேஷ் முஷாரப்' பேச்சுக்கள் நடத்த தயார் என்று கூறியபோது, இந்தியப்பிரதமர் 'வாஜ்பாயோ' பாகிஸ்தான்' அல்-கைய்தா அமைப்புடனும், தீவிரவாதிகளுடனும் தொடர்பு வைத்துள்ளமையினால் பேச்சுக்கள் இல்லை என்று மறுத்துவிட்டமை சர்வதேச சமூகத்தை எரிச்சலடைய வைத்துள்ளது என்பது என்னமோ உண்மைதான்.

இந்தியா ஒரு பிராந்திய வல்லரசு. துணைக் கண்டத்திலேயே இராணுவ



அணிசேரா நாடுகளின் மாநாட்டின்போது

பலத்தில் முன்னணியிலும் திகழ்கின்றது. ஆனால், பாகிஸ்தானை தனக்கு சரி நிகர் நாடாகக் கருதி "நீ நடந்து கொள்ளும் விதமே சரியில்லை; அதனால் உன்னோடு பேசமாட்டேன் போ" என்று சிறுபிள்ளைத் தனமாக நடந்து கொள்கின்றது.

அது மட்டுமன்றி காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு பண உதவி செய்தமை தொடர்பாக பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் 04 தூதரக அதிகாரிகள், அவர்களின் குடும்பங்கள் ஆகியோரை 48 மணி நேர அவகாசம் கொடுத்து கடந்த பெப்ரவரி 10 ஆம் திகதி வெளியேற்றியது.

இதேபோல் பாகிஸ்தானும், இந்திய உயர்ஸ்தானிகர் 'சுகிர் வியாஸின்' காரை இஸ்லாமாபாத்தில் பல இடங்களில் மறித்து ஒரு குற்றவாளியை நடத்துவது போல் நடத்தியதுடன் 'சுதிர் வியாஸை' தீவிர கண்காணிப்பிலும் வைத்திருந்தது. அதன் பின்னர் சுதிர்வியாஸையும், 04 தூதரக அதிகாரிகளையும் நாட்டைவிட்டு வெளியேற்றியது.

இரு நாடுகளுமே தம்மிடையேயுள்ள பகைமையை உயர்ஸ்தானிகர்களைச் சீண்டி சந்தோஷம் அடைந்து கொள்கின்றன. மறுபுறம் இரண்டொரு நாட்களில் புதிய உயர்ஸ்தானிகர்களை நியமிக்க இரு நாடுமே அனுமதிக்கின்றன. ஆக மொத்தம் மிகவும் மலிவான பழிக்குப் பழி விளையாட்டுக்களில் நாளும் ஈடுபட்டு வருகின்றன என்பதே நிஜம்.

இன்றைய நிலையில், காஷ்மீர் மக்கள் தமது சுதந்திரத்திற்காகப்போராடி வருகின்றார்கள், எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை மேற்கொள்வதாக மீண்டும் மீண்டும் எம்மீது குற்றம் சுமத்தாது இந்தியா, எமது மக்களின் போராட்ட உணர்வுகளை உணர வேண்டும், அதேநேரம் காஷ்மீர் பிரச்சினையை உதறித்தள்ளிவிட்டு, எவ்வித வாக்குறுதிகளையும் என்னால் தந்துவிட முடியாது என்பதுடன், வர்த்தகம் போன்ற பிற விடயங்களில் இந்தியாவுடன் இணைந்து செயலாற்ற என்னால் முடியாதுள்ளது. ஆனால், இந்தியாவுடன் பேச்சுக்கள் நடத்த நாம் தயார், இந்தியாதான் சாதகமான சைகையைக் காட்ட மறுக்கின்றது என பாகிஸ்தான் சனாதிபதி 'பர்வேஷ் முஷாரப்' தொலைக்காட்சியின் பேட்டியில் கூறியுள்ளார்.

இதற்கு, கண்டனம் தெரிவித்துள்ள இந்திய மத்திய செய்தி தொடர்பாடல் அமைச்சர், இந்தியா கேட்ட 20 தீவிரவாதிகளை கூட பாகிஸ்தான் மறுத்து விட்ட செயல் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை தூண்டிவிடும் செயல் முறை தானே... என்று கூறியுள்ளார்.

இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் அணு ஆயுதங்களைப் பயன்படுத்தினால், உலக வரைபடத்தில் பாகிஸ்தான் காணாமல் போய்விடும்; இன்று நேற்றல்ல பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு போய்ப் பார்த்தாலும் தன்னைத் தாக்கினால் அன்றித் தானாக முன் வந்து எந்த நாட்டையும் இந்தியா தாக்கியது கிடையாது என்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் 'ஜோர்ஜ் பெர்னாண்டஸ்' எச்சரிக்கை செய்துள்ளார்.

காஷ்மீரில் பாகிஸ்தானின் அடாவடித்தனத்தை ஏனோ இந்தியா முகச் சுழிப்புடன் பொறுத்துக் கொள்கின்றதே தவிர, அதை முறியடிக்கும் திட்டம் இந்தியாவிடம் இல்லை. கடந்த 04 ஆண்டுகளில் இந்திய -பாகிஸ்தான் உறவு ஏற்ற இறக்கத்துடன் தொடர்கின்றது. இதற்குப்



பெரும்பாலும் பாகிஸ்தானே காரணம் என்றாலும், இந்தியாவிடமும் தவறு இல்லாமலில்லை என்று பாகிஸ்தானுக்கான முன்னாள் இந்திய உயர்ஸ்தானிகர் ஜி.பார்த்தசாரதி கூறியுள்ளார்.

அதே நேரம் பாகிஸ்தான் அல்-கைய்தாவுடன் தொடர்பு இருப்பதாக கூறுவதை அமெரிக்க சி.ஐ.ஏ அறிக்கையும் உண்மை என்கின்றது.

2003 ஜனவரி 27 ஆம் திகதி வெளியான நியூயார்க்கர் இதழில், "அடுத்த வாரமே நாமெல்லாம் (அமெரிக்கர்கள்) சாம்பலானால் அதற்கு பாகிஸ்தான் அல்-கைய்தாவுக்கு கொடுத்த அதிக செறிவுள்ள யுரேனியம் தான் காரணமாக இருக்கும்" என்று அமெரிக்க உயரதிகாரி கூறியதாக செய்தி வெளியாகியுள்ளது.

எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை தடுத்து நிறுத்தாத பாகிஸ்தானை, அமெரிக்கா வலியுறுத்தி தடுக்க வேண்டும் என்று அமெரிக்காவிடம் இந்திய வெளியுறவு அமைச்சர் கன்வால்ஷைபால் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதே நேரம் இந்திய -பாகிஸ்தான் இடையே காணப்படும் காஷ்மீர் உட்பட்ட அனைத்துப் பிரச்சினைகளும், எதிர் காலத்தில் பேச்சுவார்த்தை மூலம் தீர்ந்து விடும் என-அமெரிக்க இராஜாங்க செயலாளர் கொலின் பவல் நம்பிக்கையுடன் கூறியுள்ளார்.

எல்லை கடந்த பயங்கரவாதத்தை கட்டுப்படுத்தினால் மட்டுமே பாகிஸ்தானுடன் பேச முடியும் என்று கூறுகின்றார் வாஜ்பாய் அதுமட்டுமன்றி அணி சேரா மாநாட்டில் முஷாரப்பும், வாஜ்பாயும் ஒருவர் முகம் ஒருவர் பார்க்காமல் திருப்பிக் கொண்டவர்கள். அப்படி இருக்கும் போது, எப்படி கொலின் பவலின் நம்பிக்கையை நிறை வேற்றப் போகிறார்கள் என்பதை காலம் தான் நிர்ணயிக்கப் போகின்றது போலும்....! □

# அணுவாயுத சர்ச்சைகளால் கொரிய தீபகற்பத்தில் மீண்டும் நெருக்கடி

உலகளாவிய ரீதியில் இன்று இரு விவகாரங்கள் முக்கியத்துவம் பெற்று விளங்கு கின்றன. வளைகுடாப் பகுதியில் தோன்றியுள்ள பலத்த நெருக்கடி மற்றையது கொரிய தீபகற்பத்தில் கிளம்பியுள்ள அணுவாயுத சர்ச்சை. இவற்றிற்கு முடிவு காண முடியாது முழு உலகமுமே திணறிக் கொண்டிருக்கின்றது.

உலகை உலுப்பி வைத்த இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது ஜப்பான் கொரியாவைக் கைப்பற்றிக் கொண்டது.ஜப்பான் தோற்றதும் கொரியா இரண்டாகப் பிரிக்கப் பட்டது. வட கொரியாவை சோவியத் யூனியனும் தென் கொரியாவை அமெரிக்காவும் ஆதிக்கத்தில் வைத்திருந்தன. இரு வல்லரசுகளும் தம் வசம் வைத்திருந்த பகுதிகளில் அரசுகளை உருவாக்கி ஆட்சியை ஒப்படைத்தது. வடகொரியா பியாங்கியாங்கை தலை நகராகக் கொண்ட கிம் இர் ஸெங் அதிபராகத் தெரிவு செய்யப் பட்டதுடன் தென் கொரியாவிற்கு சியோலைத் தலை நகராகக் கொண்டு சிங்மன்ரீ அதிபராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இவ்விரு நாடுகளை ஒன்றிணைக்க ஐ.நா.சபை பெரும் முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால் சோவியத் யூனியன் சிறிதும் ஆதரவு கொடுக்கவில்லை. ஏன் என்றால் ஐ.நா வில் அமெரிக்கா ஆதரவு நாடுகளின் பலம் தான் அதிகமாக இருந்தது. 1949 ஆம் ஆண்டு சீனாவில் அதிகார மாற்றம் ஏற்பட்டது.மாசேதுங் ஆட்சி செய்த சீனப் பிரதிநிதிகள் ஐ.நா வில் பங்குபற்ற அமெரிக்கா தடை விதித்தது.பார்மோசோ தீவை மட்டும் ஆண்ட கியாங்கேய் ஷேக்கின் பிரதிநிதிதான் ஐ.நா வின் சீனப் பிரதிநிதியாக அமெரிக்க ஆதரவுடன் செயலாற்றிக் கொண்டிருந்தார். இரண்டாவது உலகப் போரில் தோல்வியுற்ற ஜப்பானும் அமெரிக்காவுக்கு உட்பட்ட நாடாக மாறியது.



50 வருடங்களின் பின் உறவுகளைக் கண்ட மகிழ்வில் தென்கொரியர்கள்

இப்படிப்பட்ட சூழ் நிலையில் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் உள்ள வட கொரியாவின் கம்யூனிஸ்ட் அரசு நீடிப்பது தான் தனக்குப் பாதுகாப்பு என்று சோவியத் யூனியன் கருதியது. வட கொரியாவை தென் கொரியாவுடன் இணைய அனுமதித்தால் சீனாவுடன் எல்லை கொண்டிருக்கும் வட கொரியாப் பகுதியில் அமெரிக்காவின் செல்வாக்குப் பரவும் என்று சீனாவும் எண்ணியது.இரு கம்யூனிஸ்ட் நாடுகளுக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் இணைப்பு முயற்சி எழுந்த போதெல்லாம் சோவியத் யூனியன் அதற்குக் குறுக்கே நின்று தடுத்தது எனலாம்.இரு கொரியப் பிரதேசங்களையும் ஒன்று சேர்க்கும் முயற்சியை அமெரிக்கா கைவிடவில்லை. அதற்காக ஐ.நா.வை அமெரிக்கா உபயோகப் படுத்த முனைந்தது.

கொரியாவின் இரு அரசுகளும் கொள்கை ரீதியில் வித்தியாசமானவை எனவே இரு பகுதிகளிலும் பிரச்சாரப் போர் 1946 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்றது. இதனால் ஏற்பட்ட மோதல் அடிக்கடி எல்லைச் சண்டையாக மாறத் தொடங்கியது.

1950 யூன் மாதம் 25 ஆம் திகதி இவ் ஆயுத மோதல் தீவிரமாக காணப்பட்டது.வட கொரியப் படைகள் எல்லை கடந்து வந்து தாக்கின. சோவியத் யூனியன், சீனா ஆதரவு பெற்ற வட கொரியப் படைகள் நவீனரக ஆயுதங்களை உபயோகித்ததால் தென் கொரியாவால் தாக்குதலை சமாளிக்க முடியவில்லை.அந்த நாட்டின் படைகள் பின்வாங்கின. வட கொரியப் படைகள் தாக்குதலை நிறுத்தாமல் தென் கொரியாவின் தலை நகரான சியோலை நோக்கி முன்னேறின. இதனால் சிங்மன்ரீயின் அரசுக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டதை அறிந்ததும் வட கொரியாவின் படையெடுப்புச் சம்பந்தப்பட்ட பிரச்சினையை ஐ.நா. சபையில் அமெரிக்கா எழுப்பியது. வடகொரியாவின் ஆக்கிரமிப்புக்கு உள்ளான தென் கொரியாவைக் காப்பாற்றுவதற்காக ஐ.நா. படைகள் அனுப்பி வைக்கப் பட்டன. அதில் அமெரிக்க இராணுவத்தினரே அதிகமாக இருந்தனர். ஐ.நா. படைகள் கொரியாவில் இறங்குவதற்கு முன்பே வட கொரியப் படைகள் தென் கொரியாவின் தலைநகரைக் கைப்பற்றி கொண்டு முன்னேறின அமெரிக்க இராணுவத் தளபதியான ஜெனரல் மக் ஆர்தர் "ஐ.நா. படைகளின் பிரதான தளபதியாக நியமிக்கப்பட்டார். ஐ.நா. படைப்பிரிவிலுள்ள அமெரிக்க பிரிட்டிஸ் படைகள் செப்டம்பர் 15ஆம் திகதி கொரியாவில் இறங்கி அதற்குள் தென் கொரியாவின் பெரும் பகுதியை வட கொரியப் படைகள் கைப்பற்றியிருந்தன. செப்டம்பர் 17ஆம் திகதி ஐ.நா. படைகள் போரில் இறங்கியதுடன் இரு தரப்பினருக்கும் கடும் மோதல் நிகழ்ந்தது

கொரியப் போரில் சோவியத் யூனியன் நேரடியாகத் தலையிடவில்லை ஆனால் வட கொரியாவுக்கு பெருமளவான ஆயுதங்களை அது வழங்கியது.

செப்டம்பர் 28 ஆம் திகதி சியோலை ஐ.நா. படைகள் வட கொரியாவிடம் இருந்து கைப்பற்றின. அத்துடன் வட கொரியாவை நோக்கி முன்னேறின. ஒக்டோபர் 1ஆம் திகதி ஐ.நா. படைகள் வடகொரிய பகுதிக்குள் பிரவேசித்தன. 19 ஆம் திகதி வட கொரியாவின் தலைநகரான பியாங்கியாங்கைக் கைப்பற்றின. அத்துடன் சீன எல்லையை நோக்கி அணிவகுத்துச் சென்றன.

ஐ.நா. சபைப் படைகள் வடகொரியாவிலிருந்து உடனே வெளியேறி விட வேண்டுமென்றும் இல்லையென்றால் வடகொரியர்களுக்கு ஆதரவாகச்சீனத் தொண்டர்கள் போர்க்களத்தில் இறங்குவார்கள் என்றும் சீனா எச்சரிக்கை செய்தது. கொரியப்போரில் சீனாவும் குதித்தால் மூன்றாவது உலகப்போராக அது மாறி விடும் என்பதை உணர்ந்த இந்தியப் பிரதமர் வடகொரியாவில் இருந்து ஐ.நா. படைகளைத் திருப்புமாறு அறிக்கைஒன்றை வெளியிட்டார்.

அவர் வெளியிட்ட அறிக்கையை மக் ஆர்தர் மதிக்கவில்லை. ஐ.நா. வின் படைகள் சீனாவின் எல்லைக்கு போய்த் தான் நிற்கும் என அறிவித்தார்.

நவம்பர் முதலாம் நாள் ஐ.நா. படைகள் சீனாவின் எல்லையை நெருங்கின. அடுத்தநாள் சீனத் தொண்டர்கள் அலைஅலையாகக் கொரியாவில் பிரவேசித்தனர். நவீன ஆயுதங்களுடன் புயல் வேகத்தில் புறப்பட்டு வந்த சீனர்களைச் சமாளிக்கும் பொருட்டு ஐ.நா. படைகள் பெரும் சிரமத்தை எதிர் நோக்கின. அவர்களின் தாக்குதலை எதிர்த்து நிற்க முடியாமல் ஐ.நா. படைகள் பின்வாங்கத் தொடங்கின. டிசம்பர் நாலாம் திகதி பின்வாங்கியிருந்த ஐ.நா. படைகளை சீனத் தொண்டர்களின் ஆதரவு பெற்ற வட கொரியப் படை வெளியேற்றியது டிசம்பர் 29ஆம் திகதி தென்கொரிய எல்லைக்குள் சீனத் தொண்டர்களும் வடகொரியப் படையினரும் வந்து சேர்ந்தனர். ஆறு மாதப் போரில் கொரியாவின் இரு பகுதிகளும் போரின் காரணமாக நாசமுற்றதுடன் இருதரப்பினரும் ஆயிரக் கணக்கில் இறந்தனர்.

சீனத்தொண்டர்கள் உடனடியாகக் கொரியாவிலிருந்து திரும்பிச் செல்லாவிட்டால், வட கொரியா சீனாவின் மீது அணுகுண்டு வீசப்படும் என்று மக் ஆர்தர் அறிக்கை வெளியிட்டார். அவரது அறிக்கை உலக ரீதியில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியது. அணுகுண்டுகளைப்பரிசோதிக்க ஆசிய நிலப்பரப்பை மீண்டும் உபயோகப்படுத்தக் கூடாது என்ற கண்டனம் எங்கும் எழுந்தது. அதன் எதிரொலி அமெரிக்காவிலும் கேட்டது.

ஆதலால் ஐ.நா. படைகளின் தலைமைப் பொறுப்பில் இருந்து மாக் ஆர்தர் வெளியேற்றப்பட்டு அவருக்குப் பதிலாக மாத்யூ ரிட்கிலே பொறுப்பேற்றுப் போரைத் தொடர்ந்து வழிநடத்தினார். ஐ.நா. படைகள் மேலும் பின்வாங்கத் தொடங்கின.

வெற்றியும் தோல்வியும் இரு தரப்பினருக்கும் மாறிமாறி ஏற்பட்டன. வட கொரிய அணியில் கொரியர்களும் சீனர்களும் தவிர வேறு எந்தக் கம்யூனிஸ்ட் நாட்டினரும் பங்கு கொள்ளவில்லை ஐ.நா. படைகளில் இருந்தவர்களில் மிகப்பெரும்பாலானவர்கள் மேலைத் தேசத்தவர்களாவர் கொரியப் போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்ற கருத்து ஐரோப்பாவில் வலுக்கத்தொடங்கியது. இரண்டாம் உலகப் போரின் காயங்கள் ஆறுவதற்குள் மறுபடியும் ஐரோப்பிய இளைஞர்களைப் பலி கொடுப்பதை அனுமதிக்க முடியாது என்ற எதிர்ப்புக் குரல் பலம் பெற்றது.

வடகொரியாவிற்கு ஆட்பலத்தை சீனாவும் ஆயுதபலத்தை சோவியத் யூனியனும் வழங்கத் தயாராக இருந்தமையால் கொரியப்போரில் ஐ.நா. படைகளால் வெல்ல முடியாது என்பது வெளிப்படையாக இருந்தது. 1950 ஆண்டு யூன் மாதப்பிற்பகுதியில் தொடங்கிய போர் 1951 ஆம் ஆண்டிலும் 1952 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடைபெற்றது. சீனத்தாக்குதலைச் சமாளிக்க முடியாத ஐரோப்பிய நாடுகள் போரை ஒரு முடிவிற்கு கொண்டு வரும்படி அமெரிக்காவை நிர்ப்பந்திக்கத் தொடங்கின. 1952 ஆம் ஆண்டில் நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஐஸன்ஹோவர் வெற்றி பெற்றார். பதவி ஏற்பதற்கு முன்னர் அவர் கொரியாவிற்கு விஜயம் மேற்கொண்டு அமெரிக்க தேர்தலில் கொரியப் போர் ஒரு பிரச்சார சாதனமாக உபயோகிக் கப்பட்டது. ஏனென்றால் ஐ.நா. படைகளில் பெரும் பங்கு அமெரிக்காவுக்கு உரியதாக இருந்தது.136862 அமெரிக்கர்கள் போரில் கொல்லப்பட்டிருந்தனர்.அன்னிய நாட்டு மண்ணில் அமெரிக்கர்கள் அநியாயமாகக் கொல்லப்படுவதை தவிர்க்கப்பாடுபடப் போவதாக ஐஸன் ஹோவர் தேர்தல் பிரச்சாரத்தின் போது உறுதியளித்தார்.

1953 முற்பகுதியில் போர் நிறுத்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன.அதை சிங்மன்ரீ எதிர்த்தார். அவரைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டது. மூன்று ஆண்டு கால போரிற்கு பின் 1953 யூலை 27 ஆம் திகதியில் இருந்து கொரியாவில் அமைதி நிலவியது. இப் போரினால் சின்னா பின்னமாக்கப்பட்ட கொரிய மக்கள் இன்றும் தம் உறவுகளை பிரிந்தும் உள்ளனர். சில அமைப்புக்களின் முயற்சியினால் சிலர் தற்போது இணைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறிருக்கும் பட்சத்தில்.

சு. பாஸ்கரன்

1953 ஆம் ஆண்டு ஏற்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையை கைவிட வேண்டிய நிலை உருவாகும். என்று வட கொரியா, அமெரிக்கா மீது எச்சரிக்கை விடுத்துள்ளது. காரணம் அணு ஆயுதப்பிரச்சினை தொடர்பாக இருதரப்பு பேச்சு நடத்த அமெரிக்கா மறுத்திருப்பதை வட கொரியா வன்மையாகக் கண்டித்துள்ளது. வட கொரியாவின் இன்றைய பொருளாதாரத்தையும் வளர்ச்சியையும் தடுக்கும் முகமாகவே இவ்வணுவாயுத சர்ச்சையை ஏற்படுத்துவதாக வட கொரிய வெளியுறவுச் செயலகம் குற்றம் சாட்டியுள்ளது. அணுவாயுத சர்ச்சை தொடர்பாக வடகொரியாவிற்கும் அமெரிக்காவிற்குமிடையே பேச்சுக்கள் மூலம் தீர்த்துக்கொள்ள வடகொரியா அழைப்பு விடுத்தது. இவ்வழைப்பினை, கடந்த 18 ஆம் திகதி அமெரிக்கா நிராகதித்துள்ளதோடு வட கொரியாவின் ரகசிய அணுவாயுதத் திட்டங்களைக் கைவிடச் செய்ய பல தரப்பு பேச்சுக்கள் தான் பலனளிக்கும் என அமெரிக்கா தெரிவித்திருக்கின்றது.

# நியமனத்தை விரைவாக வழங்கக்கோரி
# தொண்டர் ஆசிரியர்கள் சத்தியாக்கிரகம்

## –3 ஆவது நாளாகவும் தொடர்ந்தது

(மட்டக்களப்பு)

**தமது நியமனத்தை விரைவாக வழங்கக் கோரி மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் நேற்று மூன்றாவது நாளாகவும் தமது போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.**

வடக்கு கிழக்கு மாகாண கல்வியமைச்சு பட்டியலின் படி 1000 தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குமாறு கோரி மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்க ஒன்றிய உறுப்பினர்கள் மேற்கொண்டுள்ள சத்தியாக்கிரகப் போராட்டம் நேற்றுப் புதன்கிழமை மூன்றாம் நாளாகத் தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றது.

நூற்றுக் கணக்கான தொண்டர் ஆசிரியர்கள் இப்போராட்டத்தில் இணைந்துள்ளனர். தங்கள் நியமனத்திற்கான அங்கீகாரத்தை ஏற்கனவே அமைச்சரவை வழங்கியுள்ள நிலையில் இதற்கான திறைச்சேரியின் அனுமதியினையும் பெற்றுத்தருமாறு கூறி நேற்று முன்தினம் இவர்கள் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தனிடம் மகஜர் ஒன்றினையும் அவர்கள் கையளித்துள்ளனர்.

# நெடுந்தீவு பிரதேச சபை கட்டட கடற்படையினர் வெளியேற மறுப்பு

நெடுந்தீவுப் பிரதேச சபைக் கட்டடத்தொகுதியில் நிலைகொண்டுள்ள கடற்படையினரை வெளியேற்றி அலுவலகப் பணிகளை சுமுகமாக இடம்பெற ஒத்துழைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை கடற்படையினர் நிராகரித்துள்ளனர்.

கடந்த திங்களன்று நெடுந்தீவுப் பிரதேச சபைக் கட்டடத் தொகுதியில் நிலை கொண்டுள்ள கடற்படை அதிகாரிகளுடன் பிரதேச சபையின் செயலாளர் சி.தில்லைநாதன் மற்றும் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக தொழில்நுட்ப அதிகாரிகள் பேச்சுக்கள் நடாத்தினர்.

ஆயினும், அக்கட்டடத்தொகுதியில் இருந்து வெளியேற மறுத்துள்ள கடற்படையினர் தேவையெனின் அங்கு பிரதேச சபையின் அலுவலகத்தையும் இயக்கலாமெனவும் தெரிவித்துள்ளனர்.

இதனால், இக்கட்டடத் தொகுதியில் உள்ள பிரதேச சபையின் தலைமை அலுவலகம் பொதுநூலகம், கடைத் தொகுதிகள், வாகனத் தரிப்பிடம் என்பவற்றைப் பயன்படுத்த முடியாத நிலை தோன்றியுள்ளது.

இதேவேளை, நெடுந்தீவு பிரதேசசபை தற்போது தற்காலிகமாக அப்பகுதியிலுள்ள தனியார் கட்டடமொன்றில் இயங்கி வருகின்றது.

# சீருடை பெறாத மாணவர் விபரங்கள் திரட்டல்

(கொழும்பு)

அரசினால் வழங்கப்படும் இலவசச் சீருடையைப் பெற்றிராத மாணவர்களுக்கு அவற்றை வழங்குவதற்கான நடவடிக்கை கல்வித்திணைக்களமூடாக மேற்கொள்ளப்படுகிறது.

சீருடையைப் பெற்றிராத மாணவர்களின் விபரங்கள் தற்போது பாடசாலைகள் தோறும் திரட்டப்பட்டு வருகின்றன.

இவ்வாண்டு முதல் கடைப்பிடிக்கப்பட்டு வரும் புதிய நடைமுறை காரணமாக பல மாணவர்களுக்கு இதுவரை சீருடை கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# காணாமல் போன ஊழியரின் சம்பள நிலுவையை வழங்குக

## தபால்மா அதிபரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

1996 ஆம் ஆண்டு படையினரால் கைது செய்யப்பட்டு, காணாமல் போன தபால் ஊழியரது ஆறுவருட சம்பள நிலுவையை வழங்குமாறு வட பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனோர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இக் கோரிக்கை தொடர்பான கடித மொன்றை அச்சங்கம் தபால் அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்தில், யாழ்ப்பாணம் தபால் நிலையத்தைச் சேர்ந்த ஊழியரான மேரி ரவி என்பவர் 1996 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 20ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போயுள்ளார்.

இவரது குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு காணாமல் போன ஏனைய அரச திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படுவது போன்று பிரஸ்தாப ஊழியரது சம்பளம் மற்றும் அவரது சம்பள நிலுவைகள் ஆகியவற்றை வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந் நடவடிக்கை மேற்கொள்ள தவறும் பட்சத்தில் யாழ். பிரதம தபாலகத்தின் முன் மறியல் போராட்டத்தில் ஈடுபடச் சங்கம் தீர்மானித்துள்ளது. என்றும் கூறப்பட்டுள்ளது.

# இந்திய மீன்பிடி இழுவைப் படகுகளால் ஆழ்கடல் மீன்பிடி பெரும் பாதிப்பு

வடமராட்சி கிழக்குக் கடற் பிரதேசத்தில் இந்திய இழுவைப் படகுகளின் நடமாட்டத்தினால் ஆழ் கடலுக்குச் சென்று மீன் பிடிப்பதில் பல கஷ்டங்களை எதிர் நோக்குவதாக கடற் றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப் பிரதேசத்தில் உள்ள கடற் றொழிலாளர்களின் வலைகள் சேதப்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறப் படுகின்றது.

அண்மையில் மருதங்கேணிப் பிரதேசத்தின் கரையோரப் பகுதியில் ஊடுருவிய இந்திய மீன்பிடி றோலர்கள் வடமராட்சி கிழக்கு கடற் றொழில் சமாசத்தினால் தடுத்து வைக்கப்பட்டு பின் மன்னித்து விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கடற் படையினரின் நெருக்கடி குறைந்துள்ள இவ் வேளையில் இந்திய றோலர்களின் நெருக்குதல் எமக்குப் பொருளாதார நட்டத்தை ஏற்படுத்துவதாக கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# கல்வி நடவடிக்கைகளுக்கு யுனிசெவ் 219 மில்.ரூபாய் ஒதுக்கீடு

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதிய அமைப்பானது இவ்வாண்டுக்கான நடவடிக்கைகளில் கல்விக்கு முன்னுரிமை கொடுத்துள்ளதுடன் இதற்காக2003/2004 ஆம் ஆண்டுக்காக 219 மில்லியன் ரூபாவினை ஒதுக்கியுள்ளது.

கல்வியில், ஆரம்பக் கல்வியில் இருந்து இடைநிலைக் கல்வி, மூன்றாம் நிலைக்கல்வி ஆகிய தொடர் கல்விக்கும், அடுத்த கட்டமாக ஊனமுற்ற சிறுவர், சிறுமியரின்விசேட கல்விக்கும் வசதிகளைப் பெற்றுக்கொடுக்கத் திட்டமிட்டுள்ளது.

இந்த வகையில் இவ்வாண்டு ஜனவரி 09 இல் வடக்கு -கிழக்குப் பாடசாலைகளில் முதலாம் தரத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள 55515 மாணவர்களுக்கு பாடசாலை பொதித் திட்டத்தின் கீழ் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

# மெய்வன்மைப் போட்டி

(முல்லைத்தீவு)

முல்லை றோ.க. வித்தியாலய மாணவர்களின் இல்ல மெய்வன்மைப்போட்டிகள் நேற்று முன்தினம் பிற்பகல் ஆரம்பமானது

பேர்டினன்ட், மெற்றில்டா ஆமண்டினா ஆகிய மூன்று இல்லங்கள் கலந்து கொண்டன. சிறப்புற நடைபெற்ற இவ் விளையாட்டு விழாவில் மெற்றில்டா இல்லம் வெற்றி பெற்றது.

(20)

## - வடமேல் மாகாண சபையில் -

# சமாதான முயற்சிக்கு ஆதரவான பிரேரணை தோற்கடிப்பு

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு பூரண ஆதரவு வழங்க வேண்டும் என்ற தீர்மானம் வடமேல் மாகாண சபையில் 14 வாக்குகளினால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

இத் தீர்மானத்தை சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சமர்ப்பித்து பேசுகையில் பல உயிர்களுக்கும், சொத்துக்களுக்கும் இழப்பு ஏற்படுத்திய 20 ஆண்டு கால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சிகளுக்கு சபை ஆதரவு வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார். விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறும் காலக் கட்டத்தில் இத்தகைய தீர்மானத்தைக் கொண்டு வருவது வருந்தத்தக்கது என முதலமைச்சர் அகில விஜயசிங்க கூறியுள்ளார்.

ஜே.வி.பி. உறுப்பினர்கள் பலத்த சத்தத்துடன் இந்தத் தீர்மானத்தை நிராகரிப்பதாக தீர்ப்பளித்துள்ளனர். முடிவில் 11 அங்கத்தவர்கள் தீர்மானத்திற்கு ஆதரவாகவும் 25 பேர் எதிராகவும் வாக்களித்துள்ளனர்.


# தமிழீழப் போக்குவரவுக் கழகப் பயணியர் பேருந்துப் புதிய பணி

கிளிநொச்சி, கரடிப்போக்குநகர், உருத்திரபுரம், சிவநகர் வழித்தடத்தில் மேற்படி பேருந்துப்பணி 07-03-2003 ஆம் நாள் பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனை பொது மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

சிவநகர் - கிளிநொச்சி



நேர ஒழுங்கு :

| சிவநகர் | உருத்திரபுரம் | கிளிநொச்சி |
|---|---|---|
| காலை 07.15 | 07.30 | 08.00 |

கிளிநொச்சி - சிவநகர்

நேர ஒழுங்கு :

| கிளிநொச்சி | உருத்திரபுரம் | சிவநகர் |
|---|---|---|
| மாலை 04.30 | 05.00 | 05.15 |



முகாமையாளர்,
பேருந்துப் பகுதி,
கிளிநொச்சி.

(சி-7699)



## சிந்தனைக்கு

மக்களின் விடுதலை உணர்வை அடக்கு முறையால் அழித்துவிட முடியாது. உலக வரலாறு பகரும் உண்மை இது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 06-03-2003

## தனித்துவத்தை அழித்து...!

பொதுசன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பி இயக்கமும் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றைச் செய்யும் அளவிற்கு இரு தரப்பினரும் கொள்கையளவில் இணக்கப்பாடு ஒன்றிற்கு வரும் அளவிற்கு நெருங்கி வந்துள்ளனர். இவ் இணக்கப்பாட்டின் சரத்துக்கள் எத்தகையதாக இருப்பினும் அவை நிச்சயமாக ஆளும் ஐ.தே. முன்னணிக்கும், விடுதலைப் புலிகளுக்கும் எதிரானவையாகவே இருக்கும் எனத் துணிந்து கூறமுடியும். அதாவது அமைதிக்கும், அரசியல் தீர்விற்கும் எதிரானதாகவே நிச்சயம் இருக்கும்.

ஐ.தே. முன்னணி அரசாங்கமும் - விடுதலைப் புலிகளும் இரு தசாப்தங்களுக்கு மேலாக நீடித்த போரை முடிவுக்குக் கொண்டு வந்து அமைதி முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் போக்கில் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றைச் செய்தன. ஆனால், பொ. ஐ. முன்னணியும், ஜே.வி.பி.யும் தற்பொழுது மேற்கொள்ளவுள்ள 'புரிந்துணர்வு உடன்பாடானது' மேற்கூறப்பட்ட அமைதிக்கும், யுத்த நிறுத்தத்திற்கும் நிச்சயமாக எதிரானதாக - அவற்றைச் சீர்குலைப்பவையாகவுமே இருக்க முடியும். பொ.ஐ.முன்னணியினர் ஜே.வி.பி. இனப்பிரச்சினைக்குப் பேச்சுக்கள் மூலம் இணக்கம் காண உடன்பட்டுள்ளதாகத் தற்பொழுது கூறிக்கொண்டாலும் அது நடைமுறையில் சாத்தியமாகப் போவதில்லை. ஏனெனில் ஜே.வி.பி. வெளிப்படையாகவே சமாதான பேச்சுவார்த்தைகளை எதிர்த்து வருவதோடு யுத்தம் மூலமே தீர்வென வலியுறுத்தியும் வருகின்றது.

பொ.ஐ. முன்னணியும் சரி, ஜே.வி.பி.யும் சரி இன்று புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றைச் செய்துகொள்வதற்கு முனைப்பாக நிற்பதற்குக் காரணம் - எவ்வகையிலேனும் ஐ.தே. முன்னணி அரசாங்கத்தைக் கலைத்து விடுதல் என்ற ஒரே நோக்கத்தின் அடிப்படையிலேயே ஆகும். இதில் இரண்டாம் கேள்விக்கு இடமே இல்லை.

ஏனெனில், ஆட்சியைக் கலைத்துப் பொதுத் தேர்தல் ஒன்றிற்குத் தற்பொழுது தயாரான நிலையில் இல்லை. ஏனெனில், பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறுமானால் மக்கள் தம்மை ஆட்சியில் அமர்த்துவார்கள் என்ற நம்பிக்கை அவர்களுக்குச் சிறிதும் கிடையாது. ஆகையினால், ஆட்சிக் கவிழ்ப்புடன் மட்டும் நின்று கொண்டு விடுதல் என்பதே அவர்களின் நோக்கமாகும்.

பொ.ஐ. முன்னணி குறிப்பாகச் சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பி.யுடன் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றிற்கு வருவதற்கெனப் பெருமளவு விட்டுக் கொடுப்புச் செய்திருத்தல் வேண்டும். ஏற்கனவே, வெளியாகியுள்ள தகவல்களின்படி, ஜே.வி.பி. பல நிபந்தனைகளை முன் வைத்திருந்ததாக அறியமுடிகின்றது.

ஆகையினால், இப்புரிந்துணர்வு உடன்பாட்டிற்கென பல கொள்கை மாற்றங்களைப் பொ.ஐ. முன்னணி - அதாவது, சிறிலங்கா சுதந்திரக் கட்சி செய்திருத்தல் அவசியமானதாக இருந்திருக்கும். இக்கொள்கை மாற்றங்கள் சில வேளைகளில் சிறிலங்காவின் அரசியல்போக்கையே தீர்மானிப்பவையாக மாறுமாயினும் அது ஆச்சரியத்திற்குரியதல்ல.

இதேவேளை, ஜே.வி.பி. அமைப்பு பொ.ஐ. முன்னணியை வழி நடத்த முற்படுகின்றது என்ற குற்றச்சாட்டு ஏற்கனவே தெரிவிக்கப்பட்டதொன்றே. இந்நிலையில், புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்தாகும் பட்சத்தில் நிச்சயமாக பொ.ஐ. முன்னணியின் மீதான ஜே.வி.பி.யின் ஆதிக்கம் நிராகரிக்கப்பட முடியாததாகவே இருக்கும்.

இத்தகையதொரு நிலை ஏற்படுமானால் அது நிச்சயமாக பொ.ஐ. முன்னணிக்குப் பெரும் பின்னடைவாகவே இருக்கும். அதாவது, பழம் பெரும் கட்சி ஒன்று வேறொரு கட்சியினால் வழி நடத்தப்படுவதென்பது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இருப்புக் குறித்தே கேள்வி எழ வைக்கக் கூடியதொன்றாகும். அத்தோடு அக்கட்சியின் தனித்துவத்தையும், வரலாற்றையும் அழித்துவிடவும் கூடியதுமாகும்.

ஆனால், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு - பொ.ஐ. முன்னணிக்கு இதனைவிட வேறு வழி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஐ.தே. முன்னணி அரசாங்கத்திற்கு ஈடு கொடுத்துச் செயற்பட முடியாத அளவிற்கு சுதந்திரக் கட்சியின் தலைமை பலவீனமானதாக உள்ளது. ஆனால், அக்கட்சியின் தலைமை இன்னமும் ஆட்சிக் கனவுகளுடன் இருப்பதினால் தமது தனித்துவத்தை அழித்தாயினும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளவே முனைகின்றது. ஆனால், இக்கனவு பலிக்குமா? அது பலித்தாலும் ஜே.வி.பி. எவ்வளவு காலத்திற்கு அது தொடர அனுமதிக்கும் என்பதற்குக் காலம் தான் பதில் கூறவேண்டும்.

# பரீட்சை மோசடியில் ஈடுபட்டோர் மீது கடும் நடவடிக்கைக்கு உத்தரவு

### சாதாரணதரப் பரீட்சையில் 500 முறைப்பாடுகள்

(கொழும்பு)

கடந்தமுறை நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின்போது ஆள்மாறாட்டம் செய்தமை மற்றும் ஏமாற்று வேலைகளில் ஈடுபட்டமை தொடர்பாக 500 முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்துள்ளதாகவும், இவை தொடர்பாக விசாரணைகள் செய்து வருவதாகவும் பரீட்சை ஆணையாளர் ஏ.எம்.விஜயசிறி தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணைகளில் குற்றவாளிகளாகக் காணப்படும் மாணவர்களின் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட மாட்டாது எனவும், அத்துடன் அவர்கள் அரசாங்கத்தினால் நடாத்தப்படும் எந்தவொரு பரீட்சையிலும் தோற்றுவதற்கு குறிப்பிட்ட காலத்திற்குத் தடை விதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# லஞ்ச ஊழல் ஆணையாளரை விசாரிக்க சட்டமா அதிபரிடம் ஆலோசனை

(கொழும்பு)

சிறிலங்காவின் லஞ்ச ஊழல் ஆணையாளர் சி.விக்கிரம சூரியவுக்கு எதிரான முறைப்பாடுகள் சம்பந்தமாக, சட்டமா அதிபரின் ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்படவிருக்கின்றன.

லஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் அந்தரங்கத் தன்மை விக்கிரம சூரியவினால் மீறப்பட்டுள்ளது என்ற வகையில் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க சமர்ப்பித்த முறைப்பாடு சம்பந்தமாக, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சி.விக்கிரம சூரிய மீதும், ஆணைக்குழுவின் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் பீற்றர் குணதிலக மற்றும் சரத் நந்த சேன மீதும் விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

# பேச்சுக்கள் மூலமே இனப்பிரச்சினைத் தீர்வு; ஜே. வி. பி. இணக்கம் தெரிவித்துள்ளது!

### பொ.ஐ.மு. செயலாளர் கூறுகிறார்

(கொழும்பு)

பொ.ஐ.முன்னணிக்கும் ஜே.வி.பிக்கும் அண்மையில் நடைபெற்ற பேச்சுக்களின்போது இனப்பிரச்சினைத் தீர்வுக்குப் பேச்சுக்கள் மூலம் தீர்வு காண்பது என இணங்கியுள்ளதாக பொ.ஐ.மு செயலாளர் தெரிவித்துள்ளார்.

இப் பேச்சுக்களின்போது தற்போதைய அரசியலமைப்பை மாற்றுவது தொடர்பாக வும், தேர்தல் முறையை மாற்று வது தொடர்பாகவும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ரத்துச் செய்வது தொடர்பாகவும் இரு தரப்பினரும் பொதுவான இணக்கப்பாட்டுக்கு வந்திருப்பதாகவும் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், இரு கட்சியினரும் இணைந்து பொருளாதார நடவடிக்கைகள், தேசிய வளங்களைப் பாதுகாத்தல், கைத்தொழிலை மேம்படுத்தல் போன்றவைகளில் கவனம் செலுத்த இணங்கியுள்ளனர்.

## பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் தேசிய வரவு - செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகம் ஊடாக, முதற்கட்டமாக 4000 பட்டதாரிகளுக்கு அரச திணைக்களங்களில் வேலை வாய்ப்பு வழங்கப் படவுள்ளது.

இவ்வருடத்துக்கான அரச சேவைகளில் புதிய வேலை வாய்ப்புக் கொள்கை தொடர்பாக அமைச்சர் பந்துல குணவர்த்தன எடுத்த நடவடிக்கையின் பேரிலேயே மேற்படித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

இவ்வருடம் நவம்பர் மாதம் விண்ணப்பம் கோரப்பட்டு மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகம் தோறும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கீழுழைப்பிலுள்ள பட்டதாரிகள் விபரங்கள் திரட்டல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கில் அரசாங்க திணைக்களங்களில் கீழுழைப்பில் உள்ள பட்டதாரிகளுக்கு பொருத்தமான நியமனங்கள் வழங்குவதற்கு நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பட்டதாரி தரத்தில் கீழுழைப்பில் உள்ளவர்கள் நீண்ட காலமாக எழுதுநர் தரத்தில் உள்ள நியமனங்களையே பெற்று வருவது குறித்து முகாமைத்துவ மறுசீர மைப்பு அமைச்சுக்கு விடுத்த வேண்டுகோளையடுத்தே இந்நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது கீழுழைப்பில் உள்ள பட்டதாரிகளின் விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

(23)

# மிருசுவில் படுகொலைப் பிரதான சாட்சி 5 படையினரை அடையாளம் காட்டினார்

(கொழும்பு)

மிருசுவில் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய எதிரிகளான ஐந்து இராணுவத்தினரை வழக்கின் பிரதான சாட்சி நேற்று முன்தினம் அடையாளம் காட்டியுள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ட்ரயல் அட்பார் முறையில் நடைபெற்ற விசாரணையின் போதே சாட்சி எதிரிகளை அடையாளம் காட்டினார். இதேவேளை, கொலைசெய்யப்பட்ட எட்டுப் பேரில் ஒருவரின் சடலத்தை நீதவான் விசாரணையின் போது தாம் அடையாளம் காட்டியதாக பிரதான சாட்சியான பொன்னுத்துரை மகேஸ்வரன் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார். 2000ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி இடம்பெற்ற படுகொலை தொடர்பாக ஐந்து இராணுவச் சிப்பாய்கள் இராணுவப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# பிரஜாவுரிமை திருத்தச் சட்ட மூல விவாதம் நேற்று ஒத்திவைப்பு

சிறிலங்கா பாராளுமன்றில் நேற்று ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரஜாவுரிமை திருத்தச் சட்ட மூலம் மீதான விவாதம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றம் கூடியபோது பிரஜாவுரிமை திருத்தச் சட்ட மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இருந்த போதிலும் இந்தச் சட்ட மூலம் சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப் பட்டுள்ளதால் அதன் மீதான விவாதம் பின் தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பாராளுமன்ற நடவடிக்கைகள் நேற்று 25 நிமிடங்களுக்கு மாத்திரமே நடைபெற்றிருந்தன.

# பெண்கள் விவகாரங்களுக்கான உபகுழுவின் முதலாவது கூட்டம் கிளி.யில் நேற்று ஆரம்பம்!

(அலுவலக செய்தியாளர்)

பெண்கள் விவகாரத்துக்கான உபகுழுவின் முதலாவது கூட்டம் நேற்று கிளிநொச்சியில் ஆரம்பமாகியது.

பெண்கள் விவகாரத்துக்கான கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக சிறிலங்கா அரசாங்கத் தரப்பில் டாக்டர் குமாரி ஜெயவர்த்தன, டாக்டர் தீவிகா உடகம, குமுதினி சாமுவேல், வைசுன் சக்காரியா, டாக்டர் பசிலா ரியாஸ் ஆகியோர் நேற்று சிறிலங்கா விமானப்படையின் உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சியை வந்தடைந்தனர்.

இவர்களை மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி, சமாதான செயலகத்தைச் சேர்ந்த செல்வி ஆகியோர் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்திற்கு அழைத்துச் சென்றனர்.

நேற்றுக் காலை 10.15 மணிக்கு ஆரம்பமாகிய இக்கலந்துரையாடலில் தமிழினி சுப்பிரமணியம், பிரமிளா சோமசுந்தரம், யாழிசை பாலசிங்கம், சுதாமதி சண்முகராசா, காயா சோமசுந்தரம் ஆகியோர் புலிகள் தரப்பு பிரதிநிதிகளாக கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் அனுசரணையாளராக கலாநிதி அஸ்றிற் கோய்பேக் செயற்பட்டார். விடுதலைப்புலிகளின் வள அணியினரான பத்மினி சிதம்பரநாதன் அமுதா கந்தசாமி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டம் தொடர்ந்து இன்னும் நடை பெறுவதாகவும், நேற்றைய சந்திப்பின் முக்கிய நோக்கம் தங்களை அறிமுகம் செய்துகொண்டமையே என அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

## முல்லையில் உதவி ஆணையாளர் அலுவலகம்

(முல்லைத்தீவு)

முல்லை. மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் கடந்த 25ஆம் திகதி முதல் முல்லைத்தீவில் இயங்கி வருகிறது. சகல கூட்டுறவுச் சங்கங்களுக்குமான அங்கீகாரங்கள் வழங்கப்படுவதோடு, மேற்பார்வையும் மேற்கொள்ளப்படுகின்றது. இவ் அலுவலகத்திற்கான புதிய கட்டடம் விரைவில் நிர்மாணிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (20)

# விடுதலைப்புலிகள் எம்மை சகோதரர்கள்போல் கவனித்தனர்!

### – விடுவிக்கப்பட்ட இராணுவச் சிப்பாய்

விடுதலைப்புலிகள் எம்மை உடை, உறையுள் உள்ளிட்ட எல்லா விடயங்களிலும் சிறப்பாக சகோதரர்கள்போல் கவனித்தனர் என விடுதலைப்புலிகளின் தடுப்புக் காவலிலிருந்து தமிழீழ தேசியத்தலைவர் அவர்களால் மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்கப்பட்ட சிறிலங்காவின் இராணுவச் சிப்பாய் தெரிவித்துள்ளார்.

நேற்று விடுவிக்கப்பட்ட பின்னர் கொழும்பு புறப்படுவதற்கு முன் பத்திரிகையாளரிடம் மேலும் கூறுகையில், தமிழீழ காவல் துறையினரின் வளர்ச்சிப் போக்கினை நினைக்கும்போது எமக்கு வியப்பாக இருக்கின்றது.

எம்மை விடுதலை செய்தமைக்காக விடுதலைப்புலிகளுக்கு நாம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்தோடு சிறிலங்கா அரசபடையினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகளை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்துவோம் எனறும் கூறினார்.



பெண்கள் விவகாரங்களுக்கான உபகுழுவின் முதலாவது அமர்வில்

# சிறிலங்காப் படையினரின் பிரசன்னம் தமிழர் தாயகத்தில் அகற்றப்பட வேண்டும்!

### - தமிழர் ஆசிரியர் சங்கம் அடையாளப் போராட்டம்

தமிழர் தாயகப்பகுதிகளில் சிறிலங்காப் படையினரின் பிரசன்னம் அகற்றப்பட வேண்டும் எனக் கோரி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இம்மாதம் 11 ஆம் திகதி ஒரு நாள் அடையாள போராட்டத்தை நடத்தவுள்ளது.

தமிழர் தாயகப் பகுதியில் தொண்டர் ஆசிரியர் நியமனம் இழுத்தடிக்கப்படுவதை இப்போராட்டம் நடத்தப்படவுள்ளதாக தமிழர் ஆசிரியர்சங்கப் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் திருகோணமலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்ற சங்கக் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது

போர்நிறுத்த உடன்பாட்டினால் தமிழர் தாயகத்தில் தமிழர்களுக்கு எதுவித பயனும் பெறப்படவில்லை. பாடசாலைகளில் இராணுவ பிரசன்னம் இருப்பதால் மாணவர்களுக்கான கற்பித்தல் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் பாடசாலைகளை விட்டு படையினர் வெளியேற வேண்டும் என இக்கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## சான்றிதழ் வழங்கல்

கடந்த 2002ஆம் ஆண்டு யுனிசெவ் நிறுவனமும், தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் இணைந்து சகல பகுதிகளிலும் நடைமுறைப் படுத்திய ஒவ்வொரு குழந்தையும் பாடசாலைக் கல்வியில் இணைத்தல் திட்டத்தில் கலந்து கொண்டோருக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் பாடசாலை ஆசிரியர், மாணவர்கள், கிராம அலுவலகர்கள், முல்லை மக்கள், நலன்புரிச் சங்கத்தின் முன்பள்ளி ஆசிரியர்கள், சமூக நலன் திட்ட இணைப்பாளர், திட்ட இணைப்பாளர், நிறுவன இணைப்பாளர் பெற்றுக் கொண்டனர். (20)

## தலைவரினால்...

களிடம் தெரிவிக்கையில்,

நாங்கள் சமாதானத்தில் எத்தனை உறுதியான, நேர்மையான நிலைப்பாட்டுடன் இருக்கின்றோம் என்பதை எடுத்துக்காட்டும் நல்லெண்ண நடவடிக்கையாக இவர்களை விடுதலை செய்கின்றோம் எனத் தெரிவித்தார்.

தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் பணிப்பின் பேரில் விடுவிக்கப்பட்ட இருவரும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடன் நேற்றுமாலை உலங்குவானூர்திமூலம் கொழும்பிற்குச் சென்றனர். (சோ)

## புலிகளின்....

வித்தார்.

சமாதான நடவடிக்கைகளை தொடர்வதில் புலிகள் ஆர்வமாக உள்ளனர். இந்தச் சமாதான நடவடிக்கையின் ஊடாக மேலும் ஸ்திரமான சூழலை ஏற்படுத்துவது குறித்து கருத்துக்களை பரிமாறிக் கொண்டோம் என தெரிவித்த அவர், மேலும் தெரிவிக்கையில் கடந்த ஒருவருட காலமாக போர் நிறுத்தம் கடைப்பிடித்ததற்கு எமது பாராட்டுக்கள். இக்காலத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது என்றார்.

கண்காணிப்புக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து ஓய்வுபெறும் மேஜர் ஜெனரல் ரொன்புறூவ் ஹொவ்டே கருத்து கூறுகையில்:

நாம் தலைவர் பிரபாகரன் அவர்களைச் சந்தித்து பேசிய பேச்சுக்கள் எல்லாவகையிலும் சிறப்பாக அமைந்தன. முன்னைய பேச்சுக்களில் கதைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக மீளவும் ஆராயப்பட்டதுடன் இயல்பு நிலை விவகாரங்கள் பற்றிக் கூடுதலாகப் பேசினோம். மேலும் சிறிலங்கா படையினரால் கைதாகித் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்களின் விடுதலை தொடர்பாக விரைவான முடிவு எட்டப்படும் என்றும் கூறினார். (சோ)

## உண்மையான...

மேற்படி சந்திப்பின்போது தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களுடன் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களும், தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களும் கண்காணிப்புக்குழுத் தரப்பில் அதன் புதிய தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சனும், முன்னாள் தலைவர் ரொன்ட் புரூவ்ஹொவ்டேயும் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் மேலும் தமது கருத்தினை வெளியிட்ட தலைவர் பிரபாகரன் அவர்கள், பயங்கரவாத, அவசர கால சட்டங்களின் கீழ் தான் தற்போதும் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த அடக்கு முறையிலிருந்து எமது மக்கள் இன்னமும் முற்றாக விடுதலை பெறவில்லை. களுத்துறைச் சிறைச்சாலையில் தமிழர்கள் வாழ்வா? சாவா? என்று போராடிக்கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறான நிலைமையே நிலவுகிறது. உண்மையான இயல்புநிலை தோன்றவில்லை. ஒரு வருடமாக போர் மாத்திரம் நின்றிருக்கிறதே தவிர உண்மையான சமாதானமும் இயல்பு நிலையும் மக்களுக்கு நிம்மதியான வாழ்க்கையும் தோற்றுவிக்கப் படவில்லை என்ற யதார்த்த நிலைமையை விளக்கிக் கூறினார்.

மேலும் சிறிலங்கா அரசால் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஆறு போராளிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் கண்காணிப்புக்குழுத் தலைவர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஆறு போராளிகளையும் விடுவிக்க ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுப்பதாக அவர்கள் பதிலளித்தனர்.

இனி மேற்கொண்டு போர் நிறுத்த மீறல் சம்பவங்கள், ஏதாவது அசம்பாவித சம்பவங்கள் நடந்தால் அதனை உடன் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் தெரிவிக்கவேண்டும். அதனை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவே கையாள வேண்டும் எனவும் இதனை அரசிடம் வலியுறுத்துமாறும் கண்காணிப்புக்குழுவிடம் கேட்கப்பட்டுள்ளது.

இனிப்பிடிக்கப்படுவோர் நீதிமன்றங்களிடமோ அல்லது பொலிஸாரிடமோ ஒப்படைக்கப்படாது போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் ஒப்படைக்கப்படவேண்டும். அதனைத் தீர்த்துவைக்கும் பொறுப்பு அவர்களிடமே விடப்பட்டுள்ளது எனக் கூறிய தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், ஓராண்டு புரிந்துணர்வு ஒப்பந்த காலத்தில் சிறிலங்காப் படையினர் ஒப்பந்தத்தின் சில விதிமுறைகளை, நிபந்தனைகளை கட்டுப்பாடுகளை, நிறைவேற்றப்படாத விடயத்தை கண்காணிப்புக்குழுத் தலைவர்களுக்கு சுட்டிக்காட்டினார்.

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் இது சமாதான முயற்சியில் சிறிலங் காப்படையினருக்கு உண்மையான, நேர்மையான நம்பிக்கை இல்லை என்பதை எடுத்துக்காட்டு கின்றன என்று குறிப்பிட்டார்.

பெண் போராளிகள் படையினரால் மிருகத்தனமாக தாக்கப்பட்டமை, ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் படையினர் ஈடுபடுகின்றமை, போராளிகள் அசிங்கப்படுத்தப்படுகின்றமை, பொதுமக்கள் சுடப்படுகின்றமை, ஆகியன படையினரால் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் நாம் தளம்பாமல் பொறுமைகாத்து சமாதானத்தைக் கடைப்பிடித்து வருகின்றோம். அரசு எம்மீது பொய்க்குற்றச்சாட்டுக்களை சுமத்திவருகின்றது எனவும் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் கண்காணிப்புக்குழுத் தலைவர்களிடம் தெரிவித்துள்ளார்.

முடிந்தளவு தானும் விடுதலைப் புலிகளுடன் ஒத்துழைத்து சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து பலப்படுத்துவதற்கு இயல்பு நிலையைக் கொண்டுவர முயற்சிப்பதாக புதிய கண்காணிப்புக்குழுத் தலைவர் உறுதியளித்துள்ளார்.


## சாவு அறிவித்தல்

### கதிர்காமு முத்தையா

சிவபுரம் கல்விளானை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட கதிர்காமு முத்தையா அவர்கள் 05-03-2003 அன்று காலமானார். அன்னார் பரிபூரணத்தின் அன்புக் கணவரும். பாக்கியலட்சுமி, காலஞ்சென்ற வரதநாதன், சேதுநாயகி, தங்கமணி, சற்குணதேவி, பத்மாவதி (லண்டன்), நித்தி யானந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலச்சந்திரன், பரராஜ சிங்கம், சுகுமார், குணராசா (லண்டன்), வசந்தாதேவி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை, சுப்பிரமணியம், கணபதிப்பிள்ளை ஆகியோரின் சகோதரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை அவரது இல்லத்தில் 06-03-2003 இன்று நடைபெற்று பி.ப. 4.00 மணிக்கு கல்விளான் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:

முத்தையா சந்திரன் (மகன்)

சிவபாம் கல்விளான்.

(2270)



## கூட்டம்

பரந்தன் கிளிநொச்சி வை.எம்.சீ.ஏ. யின் புனருத்தாரணக் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (11-03-2003) மாலை 3.00 மணிக்கு வண. பாஸ்டர் எஸ். சந்தனப்பிள்ளை அவர்கள் தலைமையில் கிளிநொச்சி வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள், நிர்வாக உறுப்பினர்கள் சமுகம் தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தலைமைச் செயலக நிர்வாக உறுப்பினர்.

பாஸ்டர் எஸ். சந்தனப்பிள்ளை.

(2997)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தேசியத் தலைவர் பிரபாகரனுடனான கண்காணிப்புக் குழுத் தலைவர்களின் சந்திப்பின் போது!




தேசியத் தலைவருடனான சந்திப்பில் கண்காணிப்புக் குழுவினர்



தேசியத் தலைவருடன் அரசியல் ஆலோசகரும், அரசியற்துறைப் பொறுப்பாளரும்.



தேசியத் தலைவரிடம் நினைவுப் பரிசைப் பெற்றுக்கொண்ட பின்னர் கைலாகு கொடுக்கும் புதிய கண்காணிப்புக்குழுத் தலைவர்.



நேற்றைய சந்திப்பில் இரு தரப்பினரும்.



அரசியல் ஆலோசகர், மேஜர் ஜெனரல் ஹொவ்டேயை வரவேற்கிறார்.

# புலிகளால் வரவேற்கப்படும் கண்காணிப்புக் குழுவும் விடுதலையாகிச் செல்லும் கைதிகளும்


உலங்கு வானூர்தியில் இருந்து இறங்கும் கண்காணிப்புக் குழுத் தலைவர்கள்.


விடுவிப்பின் பின் உறவினர்களுடன் தொடர்பு கொள்ளும் பொலிஸ் உத்தியோகத்தர்.


புலிகளால் வரவேற்கப்படும் போது.


புலிகள், கண்காணிப்புக் குழுவினருடன் விடுவிக்கப்பட்ட கைதிகள்.


விடுவிக்கப்பட்ட இராணுவச் சிப்பாய்.


புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர், புதிய கண்காணிப்புக் குழுத் தலைவருடன் விடுவிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்.

# கிளி.யில் பெண்கள் விவகாரங்களுக்கான முதலாவது உபகுழுக் கூட்ட நிகழ்வில்!







